"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத பாது

# காவலன்

தந்தி: "கதலிக்பிற" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

89-ம் புத். ‖ யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆவணிமீ 29-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 ‖ 34-ம் இல.

# 6-வதுசின்னப்பபாப்பரசரின் முதல் நிருபம் {3 பிரிவுகள்}

● உணர்வு: திருச்சபையின் தன்மையை நாம் நன்றாக உணர வேண்டும்.

● புதுப்பிப்பு: யேசுநாதர் எத்தனித்ததுபோல் திருச்சபை விளங்கிவர அதன் பலத்தை நாம் புதுப்பிக்க வேண்டும்.

● தொடர்பு: திருச்சபையின் போதனை திரவியத்தை உலகில் பகிர்ந்து கொள்ள உகந்த தொடர்புகளை நாம் ஏற்படுத்தவேண்டும்.

6-வது சின்னப்ப பாப்பரசரது ஆட்சியின் முதல் நிருபத்தை அகிலஉலகமும் எதிர்பார்த்திருந்தது. சுமார் 15,000 சொற்கள் அடங்கிய இந்நிருபத்தை ஆடம்பரமற்ற முறையில், பிள்ளைகளுடன் சம்பாஷிக்கும் ரீதியில், பாப்பரசர் சென்றவாரம் வெளியிட்டிருக்கின்றார். மேற்கூறப்பட்ட மூன்றுபெரும் பிரிவுகள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

எதிர்பாருங்கள்!



## தோழன்

ஈழத்தில் கத்தோலிக்கர் பயன் பெறும் வகையில் அடுத்துவரும் புரட்டாசிமாதத்திலிருந்து **தோழன்** மாதாந்த வெளியீடாக வெளிவரவிருக்கின்றான்.

வாசக நேயர்கள் நமதுசேவையை வரவேற்றுத் தக்க ஆதரவு அளிப்பார்களென எதிர் பார்க்கின்றோம்.

சிறப்பாக, ஆசிரியர்களும், ஞானோபதேச மறுமலர்ச்சியிற் பங்குகொள்பவர்களும் **தோழனை** ஆவலுடன் எதிர்பார்ப்பார்களென நம்புகின்றோம்.

தோழன் வருடசந்தா ரூபா 4-00
தனிப்பிரதி சதம் -30

மற்றும் விபரங்களுக்கு: கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

தோழன் நிர்வாகி
அர்ச், சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



## நம் மேற்றிராணியார்

வத்திக்கான் சங்கத்தின் மூன்றாவது கூட்டத்தொடரில் பங்குபற்றுமாறு நமது மேற்றிராணியாரான மகாவந். ஜே எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையவர்கள் சென்றதிங்கட்கிழமை 24-ந்தேதி யாழ்ப்பாணத்தைவிட்டுப் பிரயாணமானார். அவர் திரும்பும் வரை அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியார் மேற்றிராசன பரிபாலனராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## வத்திக்கான்சங்க 3-வது வருடகூட்டத்தில் துரிதமானவேலை எதிர்பார்க்கப்படுகிறது

● இவ்வருட கூட்டங்களுக்கு முடிவுநாள் குறிக்கப்படாததினால் இவ்வருடம் நீடித்தகாலவேலை எத்தனிக்கப்பட்டிருக்கிறது என வதந்திகள் உலாவுகின்றன.

● ஆலோசனைக்கு எடுக்கப்பட இருக்கும் 13 திட்டங்கள் மிகவும் சுருக்கமாகவரையப்பட்டு அநாவசியமான பேச்சுக்களுக்கு இடங்கொடாதிருக்க ஆயத்தங்கள் பூர்த்தியாகிவிட்டன.

● மேற்றிராணிமாரின் கூட்டதிகாரம்பற்றி ஆயத்தம்செய்யப்பட்டிருக்கும் திருத்தத்திட்டம் சங்க பிதாக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவேண்டும். உலகில் உள்ள சகல மேற்றிராணிமார்களுக்கும் திருச்சபையை ஆளுவதில் பாப்பரசருடன் கூட்டதிகாரம் இருக்கின்றது என்பதே இத்திட்டத்தின்சாரம்.

● இவ்வருட கூட்டங்களில் ஆலோசனைக்கு முதல்முதல் எடுக்கப்பட இருப்பது திருச்சபையைப் பற்றிய திட்டமே. இத்திட்டத்தில் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாய் இருக்கும் முறையும், தேவதாயார் பக்தியும் இடம்பெறுகின்றன.

## வண. பிசியன்சுவாமியாரின் மறைவு

பல வருடங்களாக யாழ்ப்பாணத் திருச்சபையிலே அரியபெரிய தொண்டாற்றியவரும், முன்னைய நாள் விக்கார் ஜெனறலும், பின் இலங்கையிலுள்ள அமலோற்பவ நாயகிசபைக் குருமாரின் சிரேஷ்டருமான வண. எவ், எம். பிசியன், ஓ. எம். ஐ. சுவாமியார் ஆவணி 21-ம்திகதி மகோனாவில், தமது 86-ம்வயதில் காலமாயினர்.

தமது பிறந்தநாட்டையும் உற்றார் உறவினரையும்விட்டு இலங்கையில் தேவனுக்காக ஊழியம் செய்யவந்து, இப்போது ஒருவர்பின் ஒருவராய் மறைந்துபோகும் முதிய குருக்களில் வண. பிசியன்சுவாமியாரும் ஒருவர். இலங்கையிலே இவர் திருஊழியம் நடத்தியகாலம் 60வருடம்.

காலஞ்சென்ற குரவர் பிரான்சு தேசத்திலேயுள்ள குயிம்பர் மேற்றிராசனத்திலே 1878-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 11-ம்திகதி பிறந்தார். ஆஞ்ஜேர்ஸ் பட்டினத்திலும் பெல்சியத்திலுள்ள லீஜ் சர்வகலாசாலையிலும் வேதசாஸ்திரங்கள் கற்று, 1903-ம்ஆண்டு ஆடி 12-ந்திகதி குருவாக அபிஷேகிக்கப்பட்டார்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## நாவைவெட்டிய குருவானவர்

அர்ச். சவேரியார் சபையைச் சேர்ந்த வண. எமல்டி என்னும் இத்தாலிய குருவானவர் பாவசங்கீர்த்தன இரகசியத்தைக் காப்பாற்றத் தனது நாவை வெட்டியெறிந்துவிட்டார். இவர் இன்று ஸ்பானிய தேசத்தில் வசித்துவருகிறார். பேச முடியாதவராகவே இன்னும் இருக்கின்றார். இவர் சீனதேசத்துக்குத் தமது 26-ம் வயதில் சென்றவர். ரியென்சின் நகரத்தில் மரியாயின் சேனைக்குத் தலைவராய் இருந்தவர், ஒருவருடத்திலே சுமார் 1,700பேரை கத்தோலிக்க வேதத்துக்கு மனந்திருப்பியவர். 1950-ம் ஆண்டு கொம்மியூனிஸ்தர்கள் இவரைச் சிறையில் அடைத்து பாவசங்கீர்த்தனத்தில் அவரிடம் சிலர் கூறிய இரகசியங்களை அறிய அவரைவதைத்தார்கள். அவர் தாம் அனுபவித்த வேதனைகளைத் தாங்கமுடியாது சிலநேரம் தவறக்கூடுமெனப் பயந்து தமதுநாவின் ஒருபாகத்தையே வெட்டித் தம்மை ஓர் ஊமையாக்கிவிட்டார். பலவருடங்களுக்குப் பிறகு செஞ்சீனாவிலிருந்து இக்குருவானவர் நாடு துரத்தப்பட்டு இன்று ஸ்பானியதேசத்தில் தொண்டாற்றிவருகின்றார்.

## ஒலிவியெற்ரு நகரத்துக்கு பாப்பரசர் விமானத்தில் சென்றார்

இத்தாலிதேசத்தின் மத்திய மலைகளில் உள்ள ஒலிவியெற்ரு நகரம் சற்பிரசாத பெருநாளுடன் நெருங்கிய சம்பந்தம் உடையது. சென்றவாரம், சற்பிரசாத திருநாள் அகிலஉலக திருநாளாக நிறுவப்பட்ட 700வருட நிறைவு விழா அங்கு கொண்டாடப்பட்டது அன்றுதினம், அங்குசமுகந்தருவதாக காலஞ்சென்ற பாப்பரசர் 23-ம்அருளப்ப பாப்பரசர் வாக்குறுதி கொடுத்திருந்ததை அறியவந்த 6-வது சின்னப்ப பாப்பரசர்தாமே விமானமூலம் அங்குசென்று அவ்வாக்குறுதியைக் காப்பாற்றினார்.

## இல்லறத்தொண்டர் அதிமேற்றிராணியாரை வரவேற்றனர்

சென்றவாரம் நீர்கொழும்பு, கத்தாரு பிரிவுகளின் இல்லறத் தொண்டர் கொழும்பு அதிமேற்றிராணியாரை வரவேற்றபோது, வரவேற்பின் பெரும்பாகம் தேசியமுறையில் நடைபெற்றதுகண்டு அதிமேற்றிராணியார் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். "றபான்"மேளம் மேற்றிராணியாரின் வரவேற்பில் ஒலித்தது. வரவேற்புச் சின்னங்

[தொடர்ச்சி 6-ம் பக்கம்]

## அயர்லாந்தில் யாழ்ப்பாணத் தமிழர்

யாழ்ப்பாணம் திரு. றெஜிஸ் இராசகாரியரின் சிரேஷ்ட புதல்வரும், இலங்கைக் கல்வித்துறையிலே பல வருடங்களாக மாவட்ட அதிகாரியாகக் கடமையாற்றித் தற்போது லண்டனிலேவசித்துவருகிறவருமான திரு ஆஞ்சலோ இராசகாரியர் அண்மையில் அயர்லாந்து சென்று பல மரியாயின் சேனைக்கூட்டங்களில் பங்குபற்றி சொற்பொழிவாற்றினார். மரியாயின் சேனையை உருவாக்கி உலகத்துக்குக் கொடுத்த பெரியாராகிய திரு. பிறாங் டவ்வையும் சந்தித்து. இலங்கையில் மரியாயின் சேனை வளர்ச்சிப்பற்றிச் சம்பாஷித்தார்.

இலங்கையில் மரியாயின் சேனை கூடிய சமூகசேவைகளில் ஈடுபடவேண்டுமென்பது திரு. பிறாங் டவ்வின் கருத்தென்று தெரியவருகிறது, அன்றியும், "சேனை" என்னும் தமிழ்ச்சொல்லை மற்றவர்கள் தப்பாக விளங்கிக்கொள்ளக்கூடுமென்றும், ஆதலால் அச்சொல்லை மாற்றுதல் உசிதமென்றும் அவர் யோசனை தெரிவித்தாராம்.

காலஞ்சென்ற சம்பத்திரிசியார் கல்லூரித் தலைவரான வண. லோங் சுவாமியாரின் கல்லறை அயர்லாந்திலுள்ள இன்சிக்கோர் நகரத்திலே உள்ளது. இக்கல்லறைக்கு அருகாமையில் யாழ்ப்பாணத்திலேயே இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தொண்டாற்றிய டன் சுவாமியாரும், நெயில் சுவாமியாரும் அடக்கப்பட்டு இருக்கின்றனர். இக்கல்லறைகளிலே அடக்கப்பட்டிருப்போரின் பெயராதிய விபரங்கள் குறிக்கப்படவில்லை. இலக்கங்களின் மூலமாகவே யார் எங்கே இளைப்பாறுகிறாரென்று கண்டுபிடிக்கமுடியும். இக்கல்லறைகளுக்கும் திரு. இராசகாரியர் விஜயம்செய்தார். லோங் சுவாமியாரின் கல்லறை இலக்கம் 55.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணி மாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 30 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்குப்பின் 15-ம் ஞாயிறு | [ப] |
| 31 | தி. | அர்ச். ரேமூந்தப்பர் | [வெ] |
| | | **புரட்டாதி** | |
| 1 | செ. | காலதினம் | [ப] |
| 2 | பு. | அர்ச். ஸ்ரீபன் | [வெ] |
| 3 | வி. | அர்ச். பத்தாம் பத்திநாதர் | [வெ] |
| 4 | வெ. | காலதினம் | [ப] |
| 5 | ச. | அர்ச். யுஸ்தினி. லவுரேஞ்சியார் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ந் திகதி


## தவறுதிருக்க வழி

தவறிப்போன தனது புதல்வனை எண்ணி அன்னை துயரம் அனுபவிப்பதை நாமறிவோம். திருச்சபையும் தவறிய தன்புதல்வர்களை எண்ணி அதிக வியாகுலம் அனுபவிக்கின்றது.

கிறீஸ்துநாதர் நாயீம் பட்டணத்தின் வீதிகள் வழியாகச் சென்றார். அத்தருணம் ஒருபிரேத ஊர்வலத்தைக் கண்டார். மரித்தவனின் அன்னையில் துயரையும் அறிந்தார்.

அவளைத் தேற்றினார். மரித்தவனை உயிர்ப்பித்தார். அவனை அந்த அன்னையிடம் ஒப்படைத்தார். இந்த ஞாயிறுவில் வாசிக்கப்படும் சுவிசேஷம் இது.

திருச்சபை தனது கெட்டுப்போன மக்களுக்காக அழுது பிரலாபிக்கின்றது. பாவத்தினால் மரித்த அவர்களின் ஆன்மாக்கள் ஞானஉயிர் பெற்றருள வேண்டுமென இறைவனை வேண்டுகின்றது.

இவ்வாரத்திய சபைச்செபத்தில் இக்கருத்து வலியுறுத்தப்படுகின்றது. கிறீஸ்துவின் உதவியின்றி பாவிகள் ஈடேற்றமடைய இயலாதென எடுத்துக் காட்டுகிறது சபைச்செபம்.

நாம் எமதான்மாவை மட்டுமே கவனிப்பதுடன் எம்கடமை முடியவில்லை. தவறிப்போகும் நம் அயலவர்கள் மட்டிலும் நமக்கு கடமையுண்டென்பதை நிருபம் வற்புறுத்துகிறது.

தினை விதைத்தவன் தினையறுப்பான் என்ற உவமைகள்மூலம் பிறரின் ஆன்மநலனில் நாம் உதவவேண்டுமென்பதை இந்நிருபத்தில் சின்னப்பர் வற்புறுத்துகிறார்.

நன்மை செய்வதில் நாம் சோர்ந்து போகாதிருப்போம். எல்லோருக்கும் நன்மையே செய்வோம் என சின்னப்பரின் நிருபம் பிறருக்கு உதவுவது பற்றியே வர்ணிக்கின்றது.

நாம் தவறிப் போவதன் முக்கியகாரணங்களில் ஒன்று எமது ஆன்ம போசனமான தேவநற்கருணையை நாம் உதாசீனம் செய்வதே. தேவன் நம்மிடம் அடிக்கடி வருவராயின் நாம் தவறுதற்கு முகாந்திரமில்லை.

தேவநற்கருணையை நாம் பெறத்தவறுவதால் எமது ஆன்மீக பெலவீனம் அதிகரிக்கின்றது. எனவே, அடிக்கடி தேவநற்கருணை மூலம் எம்மிடம் வருமாறு தேவனை வற்புறுத்தி அழைக்கிறோம் ஏகாந்த செபத்தின்மூலம்.

இவ்வாரத்திய சுவிசேஷம், சபைச்செபம், நிருபம், ஏகாந்த செபம் முதலிய சகல அம்சங்களும் தவறிப்போன கிறீஸ்தவர்களை நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளன.

இவற்றைத் தொகுத்ததன்மூலம் எங்கள் தாயாகிய சத்திய திருச்சபை கெட்டுப்போன தன் புதல்வர்களையிட்டு எவ்வளவு இன்னல்படுகின்றாள் என்பது தெளிவாகின்றது.

எங்கள் அன்னைக்கு உதவுவோம். தேவபோசனத்தால் தைரியமடைந்து உலக இச்சைகளின்வழி செல்லாதிருப்போம்.

தவறுவோர்கட்கும் இந்த உத்தம மார்க்கத்தை எடுத்துரைப்போம்.

**யேசுநாதர் பாடையின் கிட்டப்போய் அதைத் தொட்டு: வாலிபனே உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திருஎன்றார் (லூக். 7:14).**

## கிறீஸ்தவ சபைகளின் தப்பபிப்பிராயங்கள் மெல்லமெல்ல மறைகின்றன

ல்லாந்துதேச கருதினால் ல்பிறிங்க் ஆண்டகையவர்கள் தமதுதேசத்தில் கத்தோலிக்கர்களுக்கும், புரொட்டஸ்தாந்தினர்களுக்கும் இடையில் இருக்கும் தப்பபிப்பிராயங்கள் மெல்ல மெல்ல மறைவதைக்கண்டு அகமகிழ்கின்றார். கிறீஸ்தவசபைகளின் ஒற்றுமை அதிவிரைவில் நடக்கக்கூடியகாரியம் அல்லவென்பதைத் தெரிவித்து, இதுவரையில் நடந்தேறிய சிலமுன்னேற்றங்களைக் கருதினால் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

● கிறீஸ்தவசபைகளுக்கிடையில் உள்ள வித்தியாசங்கள் கிறீஸ்துநாதரின் சித்தத்துக்கு மாறானவைகள் என்பதை கத்தோலிக்கரும், புரொட்டஸ்தாந்தரும் நன்றாக உணர்ந்துகொண்டார்கள்.

● இவ்வித்தியாசங்கள் கிறீஸ்துநாதருக்கு எதிரான அவதூறும் என்பதைச் சகலரும் விளங்கிக்கொண்டு அவைகளை விரைவில் ஒழிக்க நல்மனம் கொண்டிருக்கின்றனர்.

● வித்தியாசங்களுக்குக் காரணங் கண்டுபிடித்து ஒருவர் ஒருவரில் பிழைகூறுவதால் ஒரு நன்மையும் வரமாட்டாது.

● கிறீஸ்துநாதரில் நம்பிக்கையுள்ள இச்சபைகளின் இடையே உள்ள வித்தியாசங்களிலும் பார்க்க ஒற்றுமை தோன்றும் விஷயங்கள் பலஉள. இவற்றைப் பலப்படுத்துவதே முதல்செய்யத் தகுந்தது.

● நமது சபைகள் ஒன்றொன்றிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பலவிஷயங்கள் உண்டு. கத்தோலிக்கர் புதிய ஏற்பாட்டுக்குக் கூடியகவனத்தையும், புரொட்டஸ்தாந்தர் தேவ திரவிய அனுமானங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய இடத்தையும் அளிப்பது நீதியாகும் எனக் கண்டுகொண்டனர்.

● தேவதாயாரின் வணக்கம் நியாயத்துக்குரியதென்பதைப் புரொட்டஸ்தாந்தர் உணர்வது போல் தேவனுக்குரிய வணக்கம் தேவதாயாருக்குக் கொடுப்பது திருச்சபையின் போதனைக்கு எதிரானது என்பதைக் கத்தோலிக்கரில் முன் உணராதவர்கள் இப்பொழுது உணர்ந்துகொண்டனர்.

## கத்தோலிக்க சேவைக்கு இந்தோனீசிய ஜனாதிபதியின் நன்றி

கத்தோலிக்க திருச்சபை இந்தோனீசியாவில் செய்துவரும் கல்விவேலை, சமூகசேவைகளுக்கு நன்றி தெரிவிக்கும்பான்மையில் ஜனாதிபதி சுக்கார்னோ அவர்கள் அத்தேச திருச்சபையின் திருப்பூசை உபயோகத்துக்குவேண்டிய திராட்சஇரசத்தின் செலவுப் பணத்தை தாமேகட்ட முன்வந்திருக்கின்றார். சிலவாரங்களுக்கு முன் ஜக்கார்த்தாநகர அதிமேற்றிராணியார் அத்தேச திருச்சபையின் பூசை உபயோகத்துக்கு 3 வருடங்களுக்குத் தேவையான திராட்சஇரசத்தை ஸ்பானியாவிலிருந்து இறக்குமதிசெய்ய அனுமதிச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்தார். ஜனாதிபதியவர்கள் அனுமதி அளித்ததுமாத்திரமின்றி அதிமேற்றிராணியாரை வரவழைத்து, கத்தோலிக்கதிருச்சபை அங்குசெய்துவரும் சேவைகளுக்காக நன்றிகூறி அதற்கு பிரதிசெயலாக திருப்பூசைக்குத் தேவைப்படும் திராட்சஇரசச் செலவை அரசாங்கமே கட்டுவதற்கு உத்தரவு இட்டார்.

### ஆசிய கத்தோலிக்க வைத்தியர் மகாநாடு

கார்த்திகை 25 — 28

ஆசியாக்கண்ட கத்தோலிக்க வைத்தியர் மகாநாடு இவ்வருடம் பம்பாய்நகரில் கார்த்திகை 25-ம் திகதி தொடக்கம் 28-ம்திகதி வரையும் நடைபெற இருக்கின்றது. சர்வதேசசற்பிரசாத மகாநாடு 28-ம்திகதி தொடங்க இருப்பதால் மகாநாடு அதற்கு முதல் முடிவுற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று நாளும் நடக்கஇருக்கும் ஆலோசனைகள்: "வைத்தியரும் குடும்பமும்"என்ற தலையங்கத்துள் அடங்கும். முதல்நாளில், வைத்தியரும் குடும்பத்தொகை நிர்ணயமும் என்ற விஷயமும், இரண்டாம்நாளில் வைத்தியரும் விவாக ஆலோசகரும்என்ற விஷயமும், இறுதிநாளில் வைத்தியரும் விவாககல்வியும் என்ற விஷயமும் ஆலோசனைக்குரியன.

## அயோக்கியத்தை அடக்கும் இயக்கம்

அயோக்கியமான நடை, உடை, பாவனைகள், பிரசுரங்களை எதிர்க்கும் இயக்கம் உலகில் உருவாகி வருகின்றது. ஒவ்வொருதேசத்திலும் அதனின் குரலைக்கேட்கலாம். அண்மையில் பிரித்தானியாவில் அயோக்கிய இலக்கியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க சகலசமயத்தவர்களும் அடங்கிய ஒரு குழுவினர் நிறுவப்பட்டனர். அயோக்கிய பிரசுரங்கள் தலைகாட்டும் புத்தகசாலைகளை பொதுஜன பொதுஅபிப்பிராயத்தின் பலத்தினால் தலைகவிழச்செய்ய இக்குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர். இதன் தலைவர் வணக்கத்துக்குரிய கோர்பிஷவிசுவாமியார் இதுபற்றிக் கூறுகையில், "திட்டமிட்டிருக்கின்றோம். ஆனால், வரும்நாட்களில் கடும் வேலை செய்யவேண்டும். எமது திட்டத்தின்மூலம் நாட்டின்சட்டம் இயங்கக் கோரியிருக்கின்றோம். சட்டம்பேரளவில்இல்லாது உண்மையாகவே தனது வேலையைச் செய்யவேண்டும்"என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!**

கஷ்ட துன்பங்கள் இந்தச்சீவியத்துக் குரியவை. அவைகள் எம்முடன் எப்போதுமே இருக்கும். எமதுசாயல் எம்முடன் எப்போதும் இருப்பதுபோலத் துன்பதுயரங்கள் எப்போதும் எம்முடன் இருக்கும்.

ஆகையால், அவைகளை அனுபவித்தேயாகவேண்டும். சந்தோஷமாய் அனுபவித்தால் வாழ்க்கை இலகுவாயிருக்கும். மனம்நொந்தால் கசப்பாய் இருக்கும். மனம்நொந்தும் துன்பதுயரங்களை விலக்கமுடியாது. அனுபவித்தே யாகவேண்டும். எமது கஷ்டநஷ்டங்களுடன் நாம் நட்புக்கொண்டு விடுவதே உசிதம்.

சீவியத்திலுள்ள துக்கதுயரத்தை வெறுத்துச் சிலர்உயிரையே மாய்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்வுலக துன்பதுயரம் எமது மறுமைப் பேரின்பத்துக்கு வழி. தேவன் தருகிற யாவற்றையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு அவருடைய அருளின் உதவியோடு துன்பதுயரங்களை இனிமையாக மாற்றத் தேடுங்கள். சுபம்!

—அண்ணா.

## அன்னையின் அன்பளிப்பு—1

முதலாம் பரிசு
½ அடி உயரமான அன்னையின் அருமையான சுரூபம் ஒன்று

2-ம், 3-ம் பரிசுகளும் உள
யாவும் உங்களுக்கே

* * *

முடிவுதிகதி புரட்டாதிமாதம் 7-ம்உ

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ந | 4 க | ர | 5 ம் |
| 6 | | | | ■ | 7 | | |
| | | | 8 | ■ | | ■ | |
| | ■ | ண் | | ■ | ■ | ■ | |
| 9 | | | | ■ | 10 | | ■ |
| 11 | ■ | | ■ | ■ | 12 | | 13 சு |
| 14 | | ர் | 15 அ | ■ | | ■ | 16 |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |

இடமிருந்து வலம் :

1. 38-வது சற்பிரசாத மகாநாடு நடக்கவிருக்கும் நகரமே!
6. சிரிப்பு ...... சிரிப்பு ...... ஆ... ஆ...... ஆ...... ஓ...... ஓ...... குலைந்தது.
7. மேலிருந்து நான்கு ஏன் குலைந்தது?
9. குற்றம் செய்தால் அடைய வேண்டியதுதான்.
10. கத்தோலிக்கரும் இது அணியலாமா? ஆகாதே!
12. அரசரின் ஆட்சிக்காலம் முடிந்ததே (இலக்கம் 14இல்) என்றாலும் இப்படிப்பட்ட ஒரு காலம் கத்தோலிக்கருக்கு வருடத்தில் 40நாட்கள் உண்டே!
16. பகையல்லவா அதுதான் கையைக் காணவில்லை.

* * *

மேலிருந்து கீழ் :

1. யேசுநாதரின் திருப்பாடுகளின் வாரம்.
2. அம்பு தன்வேகத்தால் குலைந்து விட்டதே.
3. நம் திருமறைத் தலைவர்.
4. ——— உள்ள கடவுள் நம்மைக் காப்பார்.
5. 'நரகம்' அல்லவா அதுதான் தலைகீழ் ஆகிவிட்டதோ?
8. நீங்கள் காண்பது "அன்னை" யே தான்.
9. கள்ளுக்கடையை இப்படியும் சிலர் அழைப்பர்.
10. பிதாவுக்குப்பின் வரவேண்டியவர்.
11. படைப்பின் நாட்களைக் குறிக்கின்றதோ?
12. நமக்கு அதிகமான —— நம்பிக்கை வேண்டும்.
13. கடைசியில் சொல்வோமே.
15. அந்தோ! இந்நல்ல குணத்துக்கா இக்கதி!

* * *

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது
பிரதிபண்ணி ஒருவர்
எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம்

* * *

முகவரி: அன்னையின் அன்பளிப்பு-1,
மே/பா ஏ. பி. வி. கோமஸ் அவர்கள்,
எட்டியாந்தோட்டை.

# பேசும் பேனா

**கிறீஸ்துவின் சேவையில் :**

கிறீஸ்துவின் புனிதபணியில் இருபத்தைந்தாண்டுகள் செலவிட்ட மருதனமடத்திலுள்ள கிறீஸ்தசேவா ஆசிரமம் கடந்தவாரம் தனது வெள்ளி யூபிலிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. கிறீஸ்துவின் அன்புவழியைச் செயலில்காட்டுவதையே தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது இந்த நிலையம். அங்குசெல்வோர் இந்த உன்னத இலட்சியம் அங்குள்ள ஒவ்வொரு அம்சங்களிலும் பிரதிபலிப்பதைக் கண்ணாரக்கண்டு கொள்வர் சிறப்பாக பெற்றோருக்கு அடங்காமலும், தகாத வழிகளில் சென்றும் தம் இளவயதுக் காலத்தை வீணாக்கும்சிறார்களை, இளைஞர்களை நல்வழிப்படுத்தி வருவதில் இந்த ஆசிரமம் வெற்றிகண்டுள்ளது. இன்னும் பலஆண்டுகட்கு இந்த ஆசிரமத்தின்சேவை யாழ்ப்பாணத்திற்கும் சிறப்பாகக் கிறீஸ்தவர்கட்கும் கிடைக்க வேண்டுமென பேசும்பேனா இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

**நல்ல ஆயன் :**

இந்த ஆசிரமத்தின் பிரதம சேவகரான வண. செல்வரத்தினம் பாதிரியார் நல்ல ஆயன்என்ற கௌரவத்துக்குத் தகுதியுடையவராகிறார். அவரை நன்கறிந்தவர்கள், அவருடன் நன்கு பழகியவர்கள் இந்தக்கௌரவம் அவருக்கு மிகப் பொருத்தமான தென்பதை ஒத்துக்கொள்வர். இவ்வாச்சிரமத்தை உருவாக்கி இன்றையநிலையில் கொண்டு வருதற்கு அன்னார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சொல்லிலடங்கா. இது தவிர அருளப்பபாப்பரசர் திருச்சபையில் புகுத்திய கிறீஸ்தவ ஒற்றுமை இயக்கத்தில் இவருக்குமிகுந்த ஈடுபாடுண்டு. கத்தோலிக்கர்களும் மற்றும் கிறீஸ்தசபைகளும் ஒன்றுபட்டு ஒரே மந்தையாக வேண்டும்என்ற ஆர்வத்துடன் செயலாற்றும் வண. செல்வரத்தினம் பாதிரியார் அவர்கட்கு அவர்களது ஆசிரம வெள்ளிவிழா வாழ்த்துக்களைப் பேசும்பேனா பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கின்றது

**என்றியின் செயலினால் :**

எட்டாவது என்றிஅரசனின் ஓர் ஆசையால்தான் உங்களிடமிருந்து நாங்கள் பிரிந்தோம்என ஆங்கிலதிருச்சபையினரும், பிரபல பெண்கள் பாடசாலையொன்றின் தலைவியாகச் சிறப்புடன் தொண்டாற்றி வருபவருமான சீமாட்டியொருத்தியுடன் யான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் குறிப்பிட்டார். கத்தோலிக்கத்துக்கும், ஆங்கில திருச்சபைக்குமிடையேஉள்ள வேறுபாடுகள் மறைந்து இரண்டுசபையும் ஒரேதலைவரின்கீழ் இயங்கும்ஒருகாலம் வரும்என நான் குறிப்பிட்டதை அவர் மகிழ்ச்சியோடு வரவேற்றார். கிறீஸ்துவை வழிபடுவோரைப் பலவித இன்னல்களும் மாறிமாறி எதிர்நோக்குகின்றன. இந்நிலையில் எங்களிடமுள்ள வித்தியாசங்களை மறந்துவிட்டு நாம் ஒன்றுபட்டு செயல்படுதல் மிகமிகமுக்கியம் என்பதை அவர் வற்புறுத்தினார்.

**அவுஸ்திரேலிய சீமாட்டி :**

நாங்கள் மேலும் கிறீஸ்தவ ஒன்றுமைபற்றிஎழும் பிரச்சனைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் அந்தப் பாடசாலையில் கடமையாற்றுபவரும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவருமான ஒரு சீமாட்டியும் எங்கள் சம்பாஷணையில் கலந்துகொண்டார். இந்தச் சீமாட்டியும் ஆங்கில திருச்சபையினர். கிறீஸ்தவ ஒற்றுமைஇயக்கம்பற்றிய செய்திகளை வெகு ஆவலுடன் வரவேற்கின்றார். எங்கள் சம்பாஷணையின்போது ஆஸ்திரேலிய சீமாட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை தாம் கொழும்பில் தங்கியிருந்ததாகவும், கோவிலுக்குப் பிரார்த்தனைக்குச் சென்றபோது பாதிரியாரின் பிரசங்கம் சுவையில்லாமலும், அலுப்புத்தட்டும் வகையிலும் அமைந்திருந்தால் அந்தப் பிரார்த்தனையில் தனக்கு வெறுப்புத்தட்டியதுஎனக் குறிப்பிட்டார். இத்தருணத்தில் பாடசாலைத் தலைவியோ எல்லாப் பிரசங்கங்களும் எப்போதும் சுவையானதாக அமைந்திருப்பதில்லைஎன்பது மெய்தான். ஆயின் நாங்கள் கோவிலுக்குப் போவதன் இலட்சியம் கடவுளைப் பிரார்த்திப்பதற்காக அன்றி அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகட்குப் புள்ளியிடுவதற்காக அல்ல. எனவே எந்தநிகழ்ச்சியிலாவது அலுப்புத்தட்டினால் நாங்கள் அந்நிகழ்ச்சியை நடைபெற விட்டுவிட்டு, சில செபங்களைச் சொல்லலாம்; அல்லது வேதபுத்தகத்திலிருந்து சிலவசனங்களைப் படிக்கலாம்என்று பதிலளித்தார்.

**எங்களுக்கு ஒருபாடம் :**

இத்தவிடை உண்மையிலேயே கத்தோலிக்கர்களாலும் சிந்திக்கப்படவேண்டியதொன்று. ஞாயிறுவேளைப் பிரசங்கங்களைப்பற்றி குறைப்படுவோர் எம்மிடையே அதிகம். இவர்கள் இந்தப் புரொட்டஸ்தாந்த அம்மையாரின் முறையைப் பின்பற்றுவது நல்லது. குருவானவரின் பிரசங்கத்தைக் கிரகித்து அதன்படி நடக்கவேண்டியது எம்கடமை. ஆயினும் எங்களால் கிரகிக்கமுடியாமல் பொறுமையிழக்கும் நிலைவந்தால் நாம் முறுமுறுக்காமலும், மற்றவர்கட்கு அதைப்பற்றி வியாக்கியானம் செய்யாமலும் அல்லது பிரசங்கநேரத்தில் கோவிலிலிருந்து தூரமாகச்சென்று வீண் ஆவலாதிகளில் ஈடுபடாமலும் எங்களிடங்களில் இருந்தவாறே அமைதியாகச் செபத்தியானத்தில் ஈடுபடலாமே.

# தெரிந்துகொள்ளுங்கள்!

1. தமது 22-ம் வயதில் மரணமடைந்த யேசுசபை அர்ச்சியசிட்டவர் யாரென்று!

அர்ச். பேர்க்மன்ஸ் அருளப்பர். ஒரு பெல்ஜியரான இவர் 1621-ம் ஆண்டு தமது22-ம்வயதிலேமரணமடைந்து, 1888-ம்ஆண்டு அர்ச்சியசிட்டபட்டம் அருளப்பெற்றார். இவர் பூசைப் பரிசாரகரினதும், பாடகரான பாலியரினதும், சக்கிறிஸ்தாமாரினதும் பாதுகாவலராக விளங்குகின்றார்.

2. இஸ்ரயேல்நாட்டினை யூதர்கள் பொன்கொழிக்கும் ஒருதோட்டப்பூமியாக மாற்றிவிட்டமைக்கு முக்கியகாரணங்கள் எவையென்று!

(1) தற்கால நவீன விவசாயமுறைகளையும், நவமான சாதனங்களையும் சாவதானமாகப் பயன்படுத்திப் பிரயாசைக்கஞ்சாது ஊக்கமாக ஒன்றுபட்டு உழைத்தது. (2) ஜேர்மனியின் நஷ்டபரிகார பணமூலமும், உலகமுழுவதிலும் வசிக்கின்ற யூதர்கள் தாராளமாகஉதவிய பணமூலமும் தகுந்தசமயத்தில் முதலீடு போட்டுக்[illegible]து. (3) [illegible] புறுத்தல்[illegible]லுமிருந்து குடியேறவந்த யூதர்களுக்கு இல்லிடம்வழங்கியது.

3. கோழிகளிலெல்லாம் அதிசயமானகோழி எதுவென்று!

ஆபிரிக்காவிலுள்ள நெருப்புக்கோழி ஓர்அதிசயமானகோழியே. சேவல்நெருப்புக்கோழி சாதாரணமாக 8அடிஉயரமுள்ளது. பேட்டுக்கோழியின்முட்டை சாதாரணமுட்டையிலும் 18மடங்குபெரியது. ஒரு முட்டை வெந்நீரில்வேகச் சுமார்40 நிமிஷம்செல்லும். நெருப்புக்கோழியின்நடை ஒருநாட்டியகாரியின் நடைபோன்றது. அதன்மேல் ஓர் ஆள் இருந்தாலும் எப்போதும் போலவே அதுநடக்கும். ஓடினாலோ குதிரையைப்போல்ஓடும். உணவு [illegible]ாகச் சிறுகற்களை அது விழுங்கும்.

4. அமெரிக்கா கடைசியாகஅனுப்பிய செய்மதியின் சாதனைகள்எவையென்று!

சந்திரனில்போய் இறங்கும்படியாக அனுப்பிவைக்கப்பட்ட "றேஞ்சர்7" என்றசெய்மதியானது சென்ற ஆடி31-ந்திகதியன்று சந்திரமண்டலத்தின் மேகங்களை அடைந்துஏராளமானபுகைப்படங்களைப் பூமிக்கு அனுப்பியதன்மூலம் வானசாஸ்திரத்தில் ஒருபுதியசகாப்தம் உதயமாயிற்று. இந்தப்படங்கள் வானவெளியினூடாக 2,28,500 மைல் தூரம் கடந்து மிகத்தெளிவானமுறையில் பூமியை வந்துசேர்ந்தன. இச்செய்மதி சந்திரமண்டலத்தைத் தொடும்போது மணிக்கு 5,000மைல் வேகத்திலேசென்றது. சந்திரனைப்படம்பிடிக்க அமெரிக்கா கடந்த ஆறுவருடகாலமாகமுயன்றுவந்து இப்போதுதான் அதில் வெற்றியீட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

**சுவிற்செலாந்து :**

வத்திக்கான் சங்கவிவாதங்கள்பற்றி போதிப்பதற்கென சுவிற்செலாந்தின் பிறியோக் பல்கலைக்கழகம் ஒருஸ்தாபனத்தை நிறுவியுள்ளது. இதன் தலைவராக மேற்படி பல்கலைக் கழகத்தில் வேதசாஸ்திர போராசிரியாராகக் கடமையாற்றும் வண. கெயின்ரிச் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

**இந்தியா :**

வேரப்பொழை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. பீற்றர் வடச்சேரி அடிகளார்க்கு இந்துஆரோக்கிய ஆச்சிரமம் 'பக்த சிகாமணி' என்ற கௌரவத்தை வழங்கியுள்ளது. இக்குரவர் அண்மையில் வெளியிட்ட தத்துவார்த்தநூலைப் பாராட்டியே இக்கௌரவபட்டம் வழங்கப்பட்டுள்ளது.

**நியூசீலாந்து**

நிற வேற்றுமையை எதிர்த்து நியூசிலாந்தின் முக்கிய நகரான வெலிங்டனில் ஏழு கிறிஸ்த திருச்சபைகள் ஒன்றுகூடி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. இந்தக்குழுவில் நியூசிலாந்தின் கத்தோலிக்க திருச்சபையும் அங்கம் வகிக்கின்றது.

**அமெரிக்கா**

அமெரிக்காவின் தென்மாகாண திருவார்த்தையின் பரித்தியாகர் சபை முதல்வராக ஒரு நீக்ரோகுரவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். குருக்கள் சபையொன்றின் முதல்வராக ஒரு கருப்பர் அமெரிக்காவில் தெரியப்பட்டது இதுதான் முதல் தடவையாகும். மேற்படி குரவரின் நாமம் வண. கரோல்ட் பெரி என்பதாகும்.

**இந்தியா**

கேரளத்தில் கத்தோலிக்க தேவாலயங்கட்கு அடிக்கடி வேதவிரோதிகளால் ஆபத்துகள்வருவதை முன்னிட்டு இரவுவேளைகளில் ஆலயங்களைப் பாதுகாக்கப் பத்தாயிரத்துக்குமேற்பட்ட தொண்டர்கள் கேரளகத்தோலிக்க காங்கிரசின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**வத்திக்கான்**

வத்திக்கானிலிருந்து வெளியாகும் ஓசேவத்தூர் டெல்லா டொமினிக்கா என்ற வாரப்பத்திரிகை அமெரிக்க சிவிலுரிமைச் சட்டத்துக்குப் பாராட்டுகள் வழங்கியிருக்கிறது. அமரர் கென்னடி நடாத்திய பெரும்போர் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது என அந்த வாரசஞ்சிகை தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளது. துப்பாக்கிக்குண்டுகளால் மரணத்தை அணைத்த இளம் அமெரிக்க அதிபரொருவரின் சலியா உழைப்பும், அவரைப்பின் தொடர்ந்து ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டவர் முந்தியவரின் இலட்சியத்தை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட விடாமுயற்சியும் அமெரிக்க வரலாற்றில் அவ்விருவரையும் ஆபிரகாம் லிங்கனுக்கு இணையானவர்களாக்கியுள்ளது என அச்சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுளது.

**பெரிய பிரித்தானியா**

பெரிய பிரித்தானியாவில் கத்தோலிக்கர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. 1950-ம்ஆண்டில் பெரிய பிரித்தானியாவில் 40 லட்சத்துக்கும் சிறிது குறைவாகவே கத்தோலிக்கரின் எண்ணிக்கையிருந்தது. இன்று அங்கு 50 லட்சத்துக்குமதிகமான கத்தோலிக்கர் உள்ளர். இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில்28கத்தோலிக்க பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். பிரபுக்கள் சபையில் 48 கத்தோலிக்கர்கள் உளர். ஆயின் கத்தோலிக்க சனத்தொகையை பெரிய பிரித்தானிய மொத்தக் குடிசனக்கணக்குடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது பாராளுமன்றத்தில் 70 கத்தோலிக்க பிரதிநிதிகளும் பிரபுக்கள் சபையில் 90 கத்தோலிக்கர்களும் அங்கம் வகிக்கவேண்டியது.



# மாத்தறை— தேவதாயார்

தேவதாயாருக்குச் செய்யும் வணக்கம் திருச்சபைக்குக் கிடைத்த விலை. மதிக்கமுடியாத பெரிய சொத்தாகும். தேவமாதா கிறிஸ்தவ புண்ணியங்கள் யாவற்றிற்கும் ஒரு மேல்வரிச்சட்டமாக அவவின் பக்தர்களுக்கு அமைந்திருக்கின்று. இலங்கை ஒரு கத்தோலிக்க நாடாகக் கருதப்படமுடியாவிட்டாலும் நாடெங்கும் தேவதாயாருக்காக அமைக்கப்பட்டுள்ள கோவில்களைப் பொறுத்தவரை அது பெருமைகொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றதென்பதைஎவராலும்மறுக்கமுடியாது.

மாத்தறையிலுள்ள தேவதாயார் கோவிலும் இப்படியானதொன்றாகும். மாத்தறை கோவிலில் விசேஷமாகக் கொண்டாடப்படுவது அவவுடைய பிறந்தநினத் திருநாளே. இது வருடா வருடம் வெகுபக்தி விமரிசையோடு கொண்டாடப்பட்டு வருகின்றது. அங்குள்ள தேவதாயாரின் திருச்சுரூபமானது, இற்றைக்கு முன்னூறு வருடங்களுக்குமேற்பட்டதாகும், அது ஐரோப்பாவிலிருந்து இங்குகொண்டு வரப்பட்டமை மிகுந்த ஆச்சரியத்துக்குரிய ஒரு சம்பவமாகும். அதுபெரிய புயல்காற்றுகளுக்கும் நிரீச்சுரவாதிகளுடைய கைகளுக்கும் வெகுஅற்புதமாகத் தப்பியது. போத்துக்கிசர் காலத்தைச் சேர்ந்த இத்திருச்சுரூபமானது அவர்களின்பின் வந்த புரொட்டஸ்தாந்து மதத்தைத் சேர்ந்த ஒல்லாந்தரின் கைகளிலிருந்து அற்புதமாகத் தப்பியது. பின்னரும் தன்புற அழகில் குன்றிய இத்திருச்சுரூபமானது மெருகுபண்ண பெல்ஜியத்துக்கு அனுப்பப்பட்டு மீண்டும்வந்து சேர்ந்தகதை மிகவும் அற்புதமானது.

இத்திருச்சுரூபம் மாத்தறைமக்களை ஆபத்துக்கள் பலவற்றிலிருந்தும் பாதுகாத்தது. ஒருமுறை பெரும்பயங்கரமான கொள்ளைநோய் மாத்தறை மக்களைப் பலமாக வாட்டியபோது தேவதாயாரின் திருச்சுரூபமானது நகரத்தின் மத்தியில் ஊர்வலமாகக்கொண்டு செல்லப்பட்ட மிகக்குறுகிய காலத்துள் அக்கொள்ளைநோய் அற்றுப்போயிற்று.

இம்முறை இக்கோவிலின்வருடாந்த மகோற்சவம் புரட்டாசிமாதம் 12-ம், 13-ம் திகதிகளில் நடைபெறும். மகா மேன்மைதங்கிய போர்னட் றெக்னே ஆண்டகை கொண்டாட்டத்துக்குத் தலைமை தாங்கி, தமிழில் பிரசங்கம் செய்வார்.

நிருபர்

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 29-ந்தேதி சனிக்கிழமை பி. ப. 4மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் வழமைபோல் நடைபெறும்.

A. S. FRANCIS of MARY,
சபைக் கர்த்தருக்காக.

✝

## 2-ம் வருட மரணஞாபகம்

**சவிரிமுத்து யோசெவ் வீரசிங்கம்**

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 27-8-1898. | 1-9-1962. |

"என்பேரில் இரங்குங்கள். நீங்கள் என்றாலும் என் அன்பர்களே! என்பேரில் இரங்குங்கள், ஏனெனில், சர்வேசுரனுடையகரம் என்னைத் தொட்டுவிட்டது" (யோபு 9 : 21).

இரக்கமுள்ள யேசுவே! சவிரிமுத்து யோசெவ் வீரசிங்கத்திற்கு நித்தியஇளைப்பாற்றியைக் கொடுத்தருளும். அவர் என்றென்றும் சமாதானத்தில் இளைப்பாறக்கடவராக.

இதைக் கண்ணுறும் வண. குருமார்களே, சங். கன்னியாஸ்திரிகளே, இனசனர்களே, அன்பர்களே எனது பிரிய பத்தாவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு புரட்டாசிமாதம் 1-ம்திகதி ஊர்காவற்றுறை தேவமாதாகோவிலில் நடைபெறும், ஆத்தும இளைப்பாற்றிப் பூசைப்பலியிலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்தாவை இழந்து பரதவிக்கும் :
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கிழக்குத்தெரு,
ஊர்காவற்றுறை.

✝

திரு. எட்வட் லோறன்ஸ்
அமரபதமடைந்த

## 2-ம் வருட நினைவு

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 14-3-1946. | 1-9-1962. |

சர்வேசுரன் கொடுத்தார். சர்வேசுரன் எடுத்துக்கொண்டார்; ஆண்டவருக்குப் பிரியமானது நிறைவேறியது. "அவரின் திருநாமம் வாழ்த்தப்படக்கடவது" (யோபு 1-21).

எங்களைவிட்டுப் பிரிந்தாலும் எங்கள் நினைவைவிட்டு என்றுமே அகலாத திரு. செல்வன் எட்வட் லோறன்ஸ் இவ்வுலகைவிட்டுப்பிரிந்த 2-ம்வருடம் நிகழும் புரட்டாசிமாதம் 1-ந்திகதி பூர்த்தியாகிறபடியால் அன்றுதினம் மருதானை டீன்ஸ்ரோட், பாத்திமா தேவஆலயத்தில் காலை 6-15மணிக்கு அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை நிறைவேறும் மட்டக்களப்பிலும், ஆயித்தியமலைத் தேவாலயத்திலும் பூசைநடைபெறும் இதனைக் கண்ணுறும் உறவினர், அன்பர்கள் அனைவரும் இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரக்கமுள்ள யேசுவே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும் சுவாமி.

என்றுமேமறக்க முடியாத
பெற்றோரும், சகோதரரும், உறவினரும்.

போபஸ்லேன்,
மருதானை.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நற்கருணை நாதரிடமும், பரி. புதுமை இராக்கினி, அர்ச். செபஸ்தியார் இவர்களிடமும் நான் கேட்டுஅடைந்துகொண்ட அனுகூலத்திற்கு நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகின்றேன்.

முல்லைத்தீவு ஓர் அடியாள்


அல்ஸ்ட்ரன்
மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.
35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## இரட்டைத்தட்டு பஸ்கள்

யாழ்ப்பாணத்திலே இரட்டைத்தட்டு பஸ்களின்சேவை பெரும்பாலும் வருகிறபுரட்டாசிமாத முற்பகுதியில் ஆரம்பமாகவிருக்கிறது. அதனுல் வீதிகளிலுள்ள தடைகளைநீக்கும்வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. கச்சேரி–பெரியகடை வீதியே பெரும்பாலும் முதன்முதலாக இரட்டைத்தட்டுபஸ்கள் பிரயாணஞ்செய்யும் வீதியாயிருக்கும். பின்னர் யாழ்ப்பாணம்–பலாலிவீதி (கீரிமலைவரை) இடம் பெறும். இந்த ஐ. சி.இலக்க பஸ்கள் திருகோணமலைக்குக் கப்பலில்கொண்டு போகப்பட்டுப் பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம்கொண்டுவரப்படவேண்டுமென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## புத்தகுரு கண்டிக்கின்றுர்

"லங்காவிலுள்ள கத்தோலிக்கர் மற்றெந்தச் சாகியத்தவரையும்போல் இந்தநாட்டின் சுதேசிகளும், சுதேசாபிமானிகளுமாய் இருக்கும்போது, அந்நியநாட்டினரைப்போன்று அவர்களைப் பழித்து இழிவுபடுத்துவதும், நடத்துவதும் வருந்தத்தக்க வெட்கத்துக்குரிய ஒருசெயலாகும்; அவர்களை நாட்டின் பிற்போக்குவாதிகளென்றும், சத்துராதிகளென்றும் வசைகூறுவது புத்தர்கள் செய்யக்கூடிய மாபெரும்தீமையாகும்; ஏனெனில், அது புத்தர்களுக்கும், கத்தோலிக்கருக்குமிடையே பிணக்கையும், வாக்குவாதத்தையும், பிளவையும் கொண்டுவருவதாகும்; அதுபௌத்ததர்மத்துக்கும்விரோதமானது. தங்கள்சமயம் எதுவாயிருந்தபோதிலும் சர்வசாதாரண சகோதரத்துவமுறையிலே அவர்கள் சிந்திக்கவேண்டும்; சொல்லப்பட்ட 'பல்வேகாயா'க்கள்மூலம் கத்தோலிக்கருக்கும், புத்தர்களுக்குமிடையே பிளவுகளை உண்டுபண்ணுவது வருந்தத்தக்கது; தேசீயமனப்பான்மைகொண்ட மக்களுக்கு இதுஓர் அயோக்கியமான செயலாகக் கண்டிக்கப்படத்தக்கது" என்று நீர்கொழும்பிலே அன்றுபுதன்கிழமை நடைபெற்ற பௌத்த எக்ஸத்சங்க பாடசாலைப்பரிசளிப்புவிழாவிலே கனம். திரானகம இரத்னசார நாயகதேரோஎன்ற புத்தகுருபேசியிருக்கின்றுர்.

## பிறநாட்டு வியாபாரிகள்

புதியசட்டத்தின்கீழ் அந்நியநாட்டுப் பிரசைகள் இனிமேல் அதிகாரம்பெற்ற வியாபாரிகளாய் இருக்கமுடியாது. இன்னும் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை வேறெவருக்காவது மாற்றுவதும் அனுமதிக்கப்படமாட்டாது. அதனுல் சகல உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும், அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை ஒன்றிலே இலங்கையர்அல்லாத அதிகாரம்பெற்ற மொத்தவிற்பனவு வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள லைசென்ஸ்களை உடனடியாக நிறுத்திவிடுமாறு உணவுக்கட்டுப்பாட்டுஅதிகாரி கேட்டிருக்கின்றுர்.

## சிங்களபயிற்சிப் பாடசாலை

அரசாங்கசேவையில் புதிதாகச் சேர்ந்த ஊழியர்கள் இன்னுமே சிங்களத்தில் பயிற்சிபெருவிடில் திரும்பவும் பாடசாலைக்குப் போகவேண்டியதுதான். இவர்களுக்குச் சிங்களப்பயிற்சி அளிப்பதற்கென்று ஒருபாடசாலை அமைக்கப்படவிருக்கிறது. வழமையாகக் கந்தோர்நடைபெறும் நேரத்திலேயே இந்தப்பாடசாலை நடக்கும். அரசாங்கசேவையில் புதிதாகச்சேர்ந்து தற்போது கடமைபார்க்கிறவர்களும், இனிமேல் அரசாங்கசேவையில் சேருகிறவர்களும் இப்பாடசாலை செல்லவேண்டுமெனக் கட்டாயப்படுத்தப் படுவார்கள். இவர்களுக்கு ஆறுமாதகாலம் பயிற்சியளிக்கப்படும்.

## தடையாகஇருக்கப்படாது

சிங்களத் தகுதிப்பரீட்சையானது வேலைஉயர்வுக்கும், சம்பளஉயர்வுக்கும் ஒருதடையாக இருக்கப்படாதெனப் போக்குவரத்துமந்திரி திரு. அனில் முனசிங்கா அறிவித்துள்ளபடி, இலங்கைப் போக்குவரத்துச்சபையின் நிர்வாகப்பிரிவைச்சேர்ந்த பெருந்தொகையான தமிழ்அரசாங்க ஊழியர்கள் நன்மைஅடைந்துள்ளனர். ஏற்கனவே அவர்கள்உரியவேலையும், சம்பளஉயர்வும் பெற்றுவிட்டனர். இத்தகையவர்களில் பதினேழுபேருக்கு ஏலவே தானே வேலைஉயர்வு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## காலி ஜிம்கானு சுவீப்

காலி ஜிம்கானுகிளப் மீண்டும்சுவீப் நடத்துவதற்கு அனுமதிகொடுக்க அரசாங்கம்தீர்மானித்துள்ளது. இதன் விளைவாகக் கிளப்நிர்வாககமிற்றி தனது இரண்டுரூபாசுவீப்பைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்துவிட்டது. அதனுல், வருகிறஐப்பசிமாதம் 17-ந்திகதி ஓடவிருக்கும் கோல்ட்பீல்ட்கிண்ணத்துக்கென நடக்கவிருக்கும் அடுத்த சுவீப்புக்கான சுவீப்இடாப்புகள் அங்கத்தவர்களுக்கும், பிறருக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டன. கிளப்பினுல் நிறுத்தப்படவிருந்த 200பணியாளர்களும் மீண்டும் வேலைபெறுவார்கள்.

## பட்டினசபையின் வேண்டுகோள்

பலபாகங்களிலும்பார்க்க ஊர்காவற்றுறைக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே நடைபெற்றுவரும் பஸ் சேவைக்கட்டணம் அதிகமாயிருப்பதாலே அதனைக்குறைக்கும்படியும், வேலணையில் மீண்டும் பஸ்டிப்போவைத் திறக்கும்படியும் போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் இரு பிரேரணைகள் ஊர்காவற்றுறைப் பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கின்றன.

## இலங்கை வாங்கியகடன்

1950-ம்ஆண்டுக்கும், 1964-ம்ஆண்டுக்குமிடையிலே மேற்குஜேர்மனி, சீனு, ஐக்கிய அமெரிக்கதேசம், மற்றும் உலகவங்கி ஆகியவைகளிடமிருந்து மொத்தமாக 42கோடியே 39இலட்சம்ரூபாவை இலங்கை கடன்வாங்கியுள்ளது. இந்தக்கடன்களில் 17கோடியே 69இலட்சம்ரூபா இன்னும் உபயோகப்படுத்தப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கள்ளிறக்கும் தொழிலாளர்

இலங்கையருக்கு வேலைவாய்ப்புகள் அளிக்குமாறு இலங்கையருக்குக் கள்ளிறக்கும் தொழிற்பயிற்சியளிக்க உள்நாட்டுமந்திரி காரியாலயம் எடுத்துக்கொண்டமுயற்சிகள் பலனளிக்கவில்லை. அதனுல் தென்னிந்தியாவிலிருந்து 250 கள்ளிறக்கும்தொழிலாளரைத் தருவிக்க அது முடிவுசெய்திருக்கிறது. இதற்கானநடபடிக்கை இப்போது எடுக்கப்பட்டுவருகிறது. இங்கே பயிற்சிபெறக் கூடியவர்களின் பெயர்களைக் கொடுத்துதவுமாறு பாராளுமன்ற அங்கத்தவர்கள் பலருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் ஒருபலனுமே உண்டாகவில்லையாம்.

## இராணுவமும்புத்தர்களும்

இலங்கை இராணுவத்தின் உயர் வரிசைகளுக்குச் சென்றவருடத்திலே புதிதாகச்சேர்க்கப்பட்டுள்ள படைவீரர்களுள் பெரும்பான்மையினர் கிராமவாசிகளின் புதல்வர்களான புத்தர்களும், சிங்களவருமேயென அன்று புதன்கிழமை பிரதிநிதிகள்சபையிலே பாதுகாப்பு–வெளிநாட்டு மந்திரியின் பாராளுமன்ற காரியதரிசியான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கின்றுர்.

# குருத்துவம்

வே. அன்ரனி ஜோண்

மனிதன் ஒரு சமுதாயப் பிராணி சமுதாயத்திலே சீவிக்கிருன். சமுதாயத்திலே ஒழுங்கும், நீதியும் அமைதியும் நிலவவேண்டுமாயின் ஓர் ஆட்சிக்குழு அத்தியாவசியம். சமுதாயத்தில் ஆட்சிக்குழு இல்லாவிடில் ஒழுங்கீனம், நீதியின்மை, அமைதியின்மை ஏற்படும். கள்ளர் கூட்டம் அதிகரிக்கும். பெலவான்களால் பெலவீனர் நசுக்கப்படுவர். "வல்லமையே உரிமை" என்னும் கொள்கை நாடெங்கும்பரவும். பொதுநன்மை பாழாய்ப் போகும். மக்கள் சமுதாயத்தில்வாழ அஞ்சுவர். உலகசமுதாயத்தை ஆட்சிசெய்ய எப்படி அரசாங்கம் அவசியமோ; ஞானசமுதாயத்தை ஆட்சிபுரிய ஞானமேய்ப்பர்கள் அவசியம்.

**குரு:**—எல்லா மறையிலும், எக்காலத்திலும் குருக்கள் இருந்துவந்ததாக சரித்திரவாயிலாக நாம் அறிகிரும். குருக்கள்—சம்மனசுகளல்ல; உடலும் உள்ளமும் உள்ளமனிதர்களே. எல்லா மக்களும் குருக்களுக்கு மரியாதையும் வணக்கமும் காட்டி வந்துள்ளார்கள். கடவுளுக்குச் சில சடங்குகளைச் செய்வதற்கு மக்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டவர்கள் குருக்களாவர். இவர்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள மத்தியஸ்தர்கள். இவர்களின்கடமை பலிஒப்புக்கொடுப்பதும்; மக்கள்செய்த பாவங்களுக்காகக் கடவுளின் முன் பரிகாரம் புரிதலும்; கடவுளிடமிருந்து மக்களுக்கு மன்னிப்பு பெற்றுத்தருவதுமே. அர்ச். சின்னப்பர் குரு கிறிஸ்துநாதருடைய ஊழியக்காரர் என்றும், சர்வேசுரனுடைய பரமஇரகசியங்களைப்பகிர்ந்து கொடுக்கிறவர் என்றும் கூறுகிருர். எனவே, பரிசுத்ததந்தை தம்மை கடவுளின் தாசர்களின் தாசன் என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும். குருவாய் வருவதற்குக் கடவுளின் அழைத்தல் அவசியம். "அன்றியும் ஆரோனைப்போல் சர்வேசுரனுலே அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த மகிமைக்குத்தானுய் ஏற்படுகிறதில்லை."

குருத்துவத்தின் தெய்வீகத்தைக் கண்டு நாம் அதால் கவர்ச்சிக்கப்படுகிறும். மனிதபெலவீனத்தின் தகுதியீனத்தைக்கண்டு அதைப்பெற அஞ்சுகின்றும். கிறிஸ்துநாதர் தம்மைப் பின்சென்று வருமாறு பேதுருவானவரிடம் சொன்னபொழுது இதை அறிந்தார் யேசுநாதரால் கவர்ச்சிக்கப்பட்டார். பின் தமது ஒன்றுமில்லாமையை நினைத்துச்சொன்னுர். "ஆண்டவரே நான் ஒரு பாவி; என்னை விட்டு அகன்று போகவும்."

**மணமில்லாத வாழ்க்கையும் குருவும்:**—றேமன் கத்தோலிக்க குருக்கள் மணம் செய்வதில்லை. மணம் முடித்தால் எப்படி மனைவியைப் பிரியப்படுத்துவோம், பிள்ளைகளை எப்படி வளர்ப்போம் என்னும் உலகத்துக்குரிய கவலைகள் அவர்களை வாட்டும். கடவுளைப்பற்றியும் அவருடைய அலுவலைப்பற்றியும் அடிக்கடி நினைக்கநேரம் இருக்காது. எனவே, குருமார் மணம் புரிவதில்லை. அர்ச். சின்னப்பர் கூறுகிருர்; "நீங்கள் கவலையற்றவர்களாய் இருக்க விரும்புகிறேன். மனைவியில்லாதவன் ஆண்டவருக்கு எப்படிப் பிரியப்படலாமென்று கர்த்தருக்குரியவைகளின்மேல் கவலையுற்றிருக்கிருன்." ஒருவன் அன்பில்லாமல் சீவிக்கமுடியாது. ஆனுல், சரீரசம்பந்தமான அன்பின்றிச் சீவிக்கமுடியும். குருக்கள் மணமில்லாத வாழ்க்கையைத் தெரிந்தெடுப்பதால் அவர்கள் பால் உணர்ச்சியை நாசம்செய்வதில்லை; கடவுளின் உயர்ந்த சேவையில் நன்கு பணியாற்ற ஒப்புக்கொடுக்கிருர்கள். கடவுள் கணவனுக்கும், மனைவிக்கும் பெருகிப்பலுகக் கட்டளையைக் கொடுத்தார். குருவும் இந்தக் கட்டளையை நிறைவேற்றுகிருர்—ஞானப்பிள்ளைகளைப் பெருக்குகிருர். "என்சிறு பிள்ளைகளே, கிறிஸ்துநாதர் உங்களில் உருவாகுமட்டும் நான் மறுபடியும் வேதனைப்படுகிறேன்". கலக்கமில்லாத களங்கமற்ற ஆறு சூரியனை நன்கு பிரதிபலிக்கும். மனிதத்தன்மை என்னும் கண்ணுடி எவ்வளவுக்குச் சுத்தமாயிருக்கிறதோ, அவ்வளவுக்குக் கிறிஸ்துவின் சாயலை உலகுக்கு எடுத்துரைக்கும்.

---

## வேலைஉயர்வும் சம்பளஉயர்வும்

இலங்கைப் போக்குவரத்துச் சபையிலே திறமையாக வேலைநடைபெற வகைசெய்யுமுகமாகப் போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா மொழித்தடையை நீக்கிவிட்டிருக்கின்றுர். சிங்களத்தகுதி பெருதகாரணமாகத்தமிழ்அரசாங்க ஊழியர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த வேலைஉயர்வும், சம்பளஉயர்வும் எதிர்காலத்தில் மீண்டும்வழங்கப்படவேண்டுமென்று முடிவுசெய்திருக்கிறுர். அதனுல், சிங்களத்தேர்ச்சி பெற்றவர்கள்பெறும் சலுகைகளையெல்லாம் இவர்களும் பெறுவார்கள்.

## யாத்திரைக் கட்டுப்பாடு

வெளிநாட்டு யாத்திரைகள்மட்டில் கடுமையான கட்டுப்பாடுகளை அரசாங்கம் தற்போது செய்திருக்கின்றது. றேமான்கத்தோலிக்கர் றேமாபுரிக்கும், லூர்துபதிக்கும்மட்டுமேபோக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். ஏனையகிறிஸ்தவ சபைகளைச்சேர்ந்தவர்கள் ஜெருசலேமுக்குமட்டுமே யாத்திரையாகப் பிரயாணஞ்செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இத்தகைய யாத்திரைகளுக்கு 50பவுண் செலாவணியாக வழங்கப்படும். சமீபத்திலே 60 அங்கிளிக்கன் சபையினரைக்கொண்ட குழுவொன்றுறேமாபுரிக்கும், ஐரோப்பாவின் மறுபகுதிகளுக்கும்போக அனுமதிகேட்டு மனுப்பண்ணிக்கொண்டபோது அது நிராகரிக்கப்படலாயிற்று. ஜெருசலேமுக்குமட்டும் பிரயாணஞ்செய்ய முடியுமென்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

---

● இரண்டாவது உலகயுத்தத்திலே மொத்தமாக 48இலட்சம் ஜேர்மனியர் இறந்தும், இன்றுவரை காணப்படாமலும் போயினரெனப் புள்ளிவிபரம் இப்போது தெரிவிக்கிறது. அந்தயுத்தத்தில் ஜேர்மன் இராணுவப்படைவீரரில் 29இலட்சத்து 60ஆயிரம் பேர் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போதே இறந்தனர். 14இலட்சம் பேரின் கதி இன்னுமே கண்டறியப்படவில்லை.

● நிகழும் 1964-ம்ஆண்டின் முதல் ஆறுமாதங்களிலும் சுமார் 1 இலட்சத்து 90ஆயிரம் கார்களுக்குமேல் ஐக்கிய அமெரிக்கதேசம் முழுவதிலும் களவுபோயிருப்பதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. களவுபோன இந்தக் கார்களின்மொத்தப்பெறுமதி 73கோடியே 33இலட்சம்ரூபாவாகும்.

● முன்னர் ஒருகம்பெனியின் தலைவராகவிளங்கியிருந்த ஜேம்ஸ் கொனிங்ரன் அவர்கள் அயர்லாந்துதேச டபிளின்நகரிலே அண்மையில் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றுர். இற்றைக்குப் பதினுலுவருடங்களின் முன் இவர் டபிளின்நகரிலே பற்றறி செய்யும் கம்பெனிஒன்றை அடியிட்டு நடத்திவந்தார். 1938-ம்ஆண்டு சர்வதேச உதைபந்தாட்டப்போட்டிகளிலே அயர்லாந்தின்பக்கமாகவிளையாடிப் பிரசித்திபெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாய்க்கு ஏன் இத்தனை வணக்கம்

(எஸ். எம். ஜே.)

தேவதாயாரான மரியாய்க்கு இந்த மாநிலம் ஏன் வணக்கம் செலுத்த வேண்டும்? திருச்சபை அவளிடம் அன்பு பூணவும், அவளைப்பக்திபண்ணவும் காரணம்என்ன? இந்தவினுக்களை நாம் அலசிஆராய்வது பயனுடைத்தாகும். இதைஆராய திருச்சபையின் சத்தியங்களின் மூலாதாரத்தையே நாம் ஆதாரமாக்குவது பொருத்தமாகும். அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணமே நமக்கு விடையளிக்கிறது. **வார்த்தையானவர்- சருவேசுரனுடையகுமாரன் மாமிசமாகி கன்னிமரியாளிடமிருந்து பிறந்தார்** என்பது அவ்விசுவாசப் பிரமாணத்தில் அடங்கியுள்ள ஒரு சத்தியமாகும். நித்தியசருவேசுரனின் குமாரன் தமது படைப்புக்களிலிருந்தே ஒருவரைத் தெரிந்து தமது தாயாக்கிக் கொண்டார். அப்படித் தாயானவள் நசரேத்தூரின் கன்னிகை மரியாளே.

**மரியாயின் மகத்துவம்:** இங்கு மரியாயின்மகத்துவமும் பெருமையும் மேன்மையும் விளங்குவதாயுள்ளது. இது ஒன்றே திருச்சபையும் விசுவாசிகளும் அவளை சங்கைபண்ணவும், பக்தி செய்யவும், வணக்கங்காட்டவும் பூவுலகோர் மட்டுமல்லாது தேவுலகும் நித்தியமாய் அவளை மகிமைப்படுத்தவும் போதியகாரணமாகும். தேவதாயாரே தமது மகிமைஎல்லாம் சருவேசுரனிடமிருந்தே வருகின்றது என்று நமக்கு நினைவூட்டுகிறுள். **"எல்லாச் சந்ததியினரும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்; ஏனெனில், வல்லபம்மிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினூர்"** என்று அவள் செப்பியவார்த்தைகள் அர்த்தம்நிறைந்தவை. தனதுமகிமைக்கும் பெருமைக்கும் காரணர் ஆன கடவுள், அவளைத்தமது திருச்சுதனுக்குத் தாயாராக்கியதைவிட இன்னும் மேலான வேறெதையும் தனக்கு கடவுள் செய்திருக்கமுடியாது என்று தேவதாயார் கருதினுள் மானிடர் எவருக்கும் கிடைக்காத-கிட்டாத பெருமைஇது. தான்தேவகுமாரனைப்பெற்றதனுல்-அத்தெய்வீக பிறப்புக்கு தாய் ஆனதினுலேயே எவருக்கும் கிடையா தசம்பூரண பாக்கியத்தை அவள் அடைந்துகொண்டாள். இந்த மகிமையின் இரகசியத்தை-மகத்துவத்தை நாமும்தியானிக்க வேண்டும். வாக்குக்கெட்டா தேவ கடாட்சத்தைச் சிந்திக்க வேண்டும் என்று நம்மை அழைக்கின்றுள்,

**நமது ஞானவாழ்வின் முக்கிய அம்சம்:** நாம் தேவதாயாரில் கொண்டிருக்கும்பக்தி அசையாமல், உறுதியாக நமது கஷ்டதுன்பங்களிலும், சஞ்சலங்கள் கண்ணீர்க்கணவாய்கள் என்ற இருளிலும் தத்தளியாமல் அவளுடைய நம்பிக்கையில் நாம் நிலைப்பற்றியிருக்கவேண்டும். திருச்சபையின் ஞானவாழ்க்கையில் தேவதாயார் எவ்வளவு பிரதம பாகந்தாங்கியிருக்கிறுளோ அப்படியே நமது ஆன்மீக-ஞானவாழ்விலும் அவள் முக்கியஇடம் வகிக்கவேண்டும். அப்படியானுல் மரியாள் தேவனின்தாய் என்ற விசுவாசத்தின் அடிப்படையில் நம்பிக்கையின் அடித்தளத்தில் நமது பக்திவணக்கம் உயிர்பெற்று நிலைக்க வேண்டும். ஒரேவிசுவாச இலட்சியத்தில் நாம் அவளை வழிபடவும் மகிமைப்படுத்தவும் வேண்டும். எனவே நாம் மிகத்தெளிவுடனும், விரிந்த பரந்த விளக்கத்துடனும் இச்சத்தியத்தை அடிக்கடி நமது இருதயத்தில் தியானித்துக்கொள்வது நமதுமேற்சுமந்த தலையாய கடனுகும்.

திருச்சபையின் ஞானவாழ்க்கையில் தேவதாயாருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், நமது ஆன்மீகவாழ்விலும் தேவதாய் எவ்வளவு முக்கிய இடம் பெற்றிருக்கவேண்டும் என்பதை நமக்கு உணர்த்துவதாகவேண்டும். இத்தகு முக்கியத்துவத்தை - பிரதம பாகத்தைத் தேவதாய்க்கு நாம் நமது ஞானவாழ்வில் அளிக்காவிட்டால் அவளுடைய பிள்ளைகளில் பூரண யோக்கியாம்சம் பெற்றவர்கள் என்ற தரப்பில் சேராதுவிட்டவர்கள் ஆவோம். அதாவது முழுஉரிமையோடும் நாம் தேவதாயாரின்பிள்ளைகள் என்ற யோக்கியதையை அடையவேண்டுமானுல் அவளதுமகிமையை— மகத்துவத்தை நாம் உற்றுணர்ந்து தியானிக்கவேண்டும். நமது இரட்சணியத்துக்கு காரணமாயிருந்த மரியாள் நமது பாராட்டுகளுக்கும், துதிகளுக்கும் பாத்திரமானவளே. ஆதிஏவாள் தன்னுலே அடைந்த மோட்சமதை புதியஏவாளாகிய மரியாள் திறந்துவைக்கலாயிருந்தாளன்றோ. சிலுவையடியில் யேசுநாதர் நமக்குத்தந்த இந்தத்தாயை வந்தனை செய்துவாழ்த்துவதும் நமது துன்பங்களை அவளுக்குக்கூறி அவளின் அடைக்கலத்தை நாடுவதும் பொருத்தமன்றோ!

(My yoke is Sweet) என்னும் நூலில் இருந்து தொகுக்கப்பட்டது.

---

## இல்லறத்தொண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் சிங்கள எழுத்துக்கள் பொறித்தட்டின. பூச்செண்டுக் குப்பதிலாக, ஒருபிடிவெற்றிலை வழங்கப்பட்டது.

அதிமேற்றிராணியார் ஆற்றிய சொற்பொழிவில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் தோன்றிய புதுமுறைகளைப்பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார். தொண்டர் கத்தோலிக்க சேவையில் காட்டிய உற்சாகத்தை மெச்சினுர், "இது இல்லறத்தொண்டரின் காலம். அறிவுநிறைந்த கிறீஸ்தவர்களின் தொண்டு தேவைப்படுகின்றது. திருச்சபை இல்லறத்தோரின் பொறுப்பில் விட்டிருக்கின்ற முயற்சிகளைச் சிறப்பாகச்செய்து முடிக்க ஆற்றல் உள்ளவர்களாக விளங்குங்கள்" என்றுர் அதிமேற்றிராணியார்.

---

†

தலைமை ஆசிரியர்

சே. சந்தியாப்பிள்ளை (செல்லக்கண்டு)

அவர்களின்

## அமரதின முதல்வருட ஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 2-2-1907 | 28-8-1963 |

அன்னுரின் ஆன்மசாந்திக்காக நிகழும் இம்மதி 28-ந்திகதி வெள்ளிக்கிழமை (28-8-64) காலை 6-30 மணிக்கு மண்டைதீவு சம்பேதுருவானவர் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை நடைபெறும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிகள், ஆசிரிய ஆசிரியைகள், அவரது மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி:
திருமதி சே. லேனம்மாவும்
பிள்ளைகளும், மருமக்கள், பேரர்களும்.

---

## வண. பிசியன் சுவா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த ஆண்டு கார்த்திகை 7-ம் திகதி இலங்கைக்குவந்து சேர்ந்தார். யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே 1904இல் அர்ச். மார்த்தீனுர் குருமடத்திலும், 1906இல் ஊர்காவற்றுறை மிசாமிலும் கடமைபுரிந்தார். 1907இல் சில்லாலை கட்டளைக்குரவராகவும், 1910இல் நாவாந்துறை கட்டளைக் குரவராகவும் சிறந்தபணியாற்றியபின் 1913இல் சம்பத்திரிசியார் கல்லூரிக்கு மாற்றப்பட்டுக் குருமட அதிபராகவும், கல்லூரி விடுதிச்சாலை அதிபராகவும் 5வருடங்களுக்குக் கடமையாற்றினுர். 1918-ம்ஆண்டு மன்னுர்ப்பகுதிச் சிரேஷ்டராக அனுப்பப்பட்டு அங்கு அவர்செய்த பணிகள் சொல்லுந்தரமன்று.

1924-ம்ஆண்டு பங்குனிமாசம் சுவாமியார் யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் விக்கார் ஜெனறலாக நியமிக்கப்பட்டு, மேற்றிராசன பரிபாலனராகவும் பலமுறைகளில் தொண்டுபுரிந்தார். இதன்பின்னர் பலவருடங்களாக சுவாமியார் இலங்கையிலுள்ள அமலோற்பவ நாயகி சபைக் குருமாரின் சிரேஷ்டராகவும், பெரியகுருமடப் பேராசிரியராகவும் கடமையாற்றியபின் விருத்தாப்பியத்தின் நிமித்தம் ஓய்வுபெற்று மகோணுவிலே தனது கடைசி வருடங்களைச் செலவழித்து வந்தார்.

ஆவணி 22-ம்திகதி சுவாமியாரின் புனிதஉடல் பலகுருப்பிரசாதிகளும், பெருந்திரளான கத்தோலிக்க பிரமுகர்களும் கூடியசமுகத்தில் கொண்டு செல்லப்பட்டு, மகோணு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. இவ்வரும்பெருங் குரவரின் ஆன்மா சாந்திஅடைவதாக.

---

## 6-வது சின்னப்ப...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அடங்கிய இந்நிருபம் அன்பும் சேவையும் தொனிக்கும்நிருபமாக விளங்குகின்றது.

அதில் பரிசுத்த பாப்பரசர்:

(1) உலக சமாதானத்துக்காகத் தம்மை அர்ப்பணிக்கின்றுர்.

(2) மக்களின் நல்லொழுக்கத்துக்காக, பிறசமயங்கள் செய்துவரும் சேவைகளுக்கு அவர்களைப் பாராட்டுகின்றுர்.

(3) பொதுவிஷயங்களில் சகலசமயங்களும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்குமாறு கோருகின்றுர்.

(4) நிரீஸ்வர வாதத்தின் வெறுந்தன்மையை எடுத்துக் காட்டுகின்றுர்.

(5) பொதுவுடமைக் கொள்கையாளர்களின் விவேகத்தை மெச்சி, அவர்களது ஆராய்ச்சியின் இயற்கையான முடிவை அவர்கள் விரைவிலே கண்டு கொள்ளத் தேவனது அருளை வேண்டுகின்றுர்.

---

● அமெரிக்க கத்தோலிக்கரின் யாத்திரைக்கோஷ்டிஒன்று கப்பல் மார்க்கமாக வருகிறகார்த்திகை 8-ந் திகதிபுறப்பட்டுஉலகம்சுற்றிக்கொண்டு வருகையிலே பம்பாய்நகர சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்குச் சமுகமளிக்கவிருக்கின்றது. அது ரோக்கியோ, ஹொங்கொங், பாங்கோக், டெல்லி, தாஜ்மஹால் ஆதியனகண்டு பம்பாய்நகரைச் சேரும்.

---


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்து வகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள்
கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!

இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்

ஓட்டோஸ் லிமிட்டெட்

தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம் தொலைபேசி: 496
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா தொலைபேசி: 577


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆவணிமாதம் 29-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org